முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 254. திருமதி கே. மரியம் உல் ஆசியா. மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

254—

தொழிலாளர் நல நிதியிலிருந்து பொறியியல் கல்லூரி தொடங்கும் திட்டம்.

** 17492—திருமதி கே. மரியம் உல் ஆசியா:*

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழிலாளர் நல நிதியிலிருந்து பொறியியல் கல்லூரி தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எங்கு எப்போது தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இல்லை என்று சொன்னார்கள். இந்தத் தொழிலாளர் நல நிதி என்பது அரசாங்கத்தினால் நிறுவப்பட்ட ஒரு ஸ்தாபனம் ஆகும். இது அரசு அதிகாரிகளினால் நடத்தப்படுகின்றது. நான் சமீபத்தில் கேள்விப்பட்டேன். இதற்கு உச்ச நீதிமன்றம் தடை விதித்திருக்கிறது என்று நான் அறிகிறேன். எனவே, இந்த ஸ்தாபனத்தின் மூலம் தொழிலாளர் நல நிதியிலிருந்து நடத்தப்படுகின்ற பொறியியல் கல்லூரி அந்தத் தொழிலாளர் குடும்பங்களுக்காகவே மாணவர்களை அனுமதி செய்வதில் தவறில்லை என்பதாலும், இந்திய அரசியல் சட்டத்திலே தொழிலாளர்களுக்காக எந்தவொரு நல்ல காரியத்தையும் நடத்துவதற்கு இடம் இருப்பதாலும் உச்ச நீதிமன்றத்தினுடைய ஆணை இதனைக் கட்டுப்படுத்தாது. இது தனியார் நிறுவனம் அல்ல. ஆகவே, தனியார் கல்வி நிறுவனத்திற்குள்ள விதிமுறைகள், தொழிலாளர் நல நிதியிலிருந்து ஆரம்பிக்கப்படும் பொறியியல் கல்லூரிக்குப் பொருந்தாது. ஆகவே, தொழிலாளர் நல நிதியிலிருந்து பொறியியல் கல்லூரி துவங்க வெளியிடப்பட்ட ஆணையை அமல்படுத்த அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய பொற்கால ஆட்சியில் தொழிலாளர்களுடைய குழந்தைகளுக்கென தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் மூலமாகத் தனிப் பொறியியல் கல்லூரி ஒன்று துவங்குவதற்கு 24-4-1992 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஆனால் உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி, தனியார் சுயநிதிப் பொறியியல் கல்லூரிகளில் நிர்வாகத்தினருக்கு ஒதுக்கப்படும் 50 விழுக்காடு இட ஒதுக்கீடு தனியார் நிறுவனங்கள் நேரிடையாக விளம்பரம் செய்து விண்ணப்பங்கள் பெற்றுத் தேர்வு செய்ய முடியாது. அரசின் மூலம் தேர்வு செய்யப்பட்ட முதுநிலை வரிசைப்படி நிரப்பப்பட வேண்டும். எனவே, தொழிலாளர்களுடைய குழந்தைகளுக்கு அதில் இடம் பெற முடியாத சூழ்நிலை இருப்பதால் இது கைவிடப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த லேபர் வெல்ஃபேர் பண்ட் என்பது தொழிலாளர்களுக்காக, தொழிலாளர்களிடமே வசூல் செய்யப்படும் பணம். அந்த நிதியிலிருந்து அவர்களுடைய குழந்தைகளுக்காக ஆரம்பிக்கப்படுவதில் எந்த நீதிமன்றமும் ஆட்சேபிக்கவில்லை. இந்த நிதியிலிருந்து ஆரம்பிக்கப்படும் பொறியியல் கல்லூரியில் தொழிலாளர் குடும்பங்களைத் தவிர பிற ஆட்களைத் தேர்வு செய்தால்தான் தவறாகக் கருதப்படும். ஐம்பது சதவீத இட ஒதுக்கீட்டை தொழிலாளர் நல நிதி அளிக்கும் குடும்பத்தினருக்கு அளிப்பதில் தவறு இல்லை. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பெயரில் இயங்கும் இந்த லேபர் வெல்ஃபேர் பண்டிலிருந்து இப்படிப்பட்ட பொறியியல் கல்லூரியைத் துவக்க தொழிலாளர் குடும்பங்கள் ஆவலோடு இருப்பதன் காரணமாக 24-4-1992 இல் வெளியிடப்பட்ட அந்த அரசாணையை அரசு மீண்டும் பரிசீலனை செய்து அதனை அமலாக்க ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையில்தான் தனியார் பொறியியல் கல்லூரி ஆரம்பிக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 255, திரு. ஆர். பி. பரமசிவம், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.